# தமிழியல்

# JOURNAL OF TAMIL STUDIES

## December 2014

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
திருவள்ளுவர் ஆண்டு 2045, ஜய, மார்கழி - தை

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
Taramani,Chennai - 600 113. Tamilnadu,India.
ISSN No.0022-4855 Vol No.86 Issue: December 2014

# சங்ககால மீனவர்களின் பண்பாட்டுச் சூழலியல்

சண்முகராஜா சிறிகாந்தன்

ஒரு குறிப்பிட்ட மக்கள் சார்ந்த இலக்கியங்கள் மக்களினுடைய பண்பாட்டின் ஒட்டுமொத்த முழுமையின் அங்கங்களாக அமைகின்றன. மக்களுடைய சமூக வாழ்வு, சமூக வரலாறு ஆகியவற்றை மீட்டுருவாக்கம் செய்வதில் இலக்கியங்கள் கணிசமாகப் பங்களிப்பினைச் செய்துவருகின்றன. இந்நிலையில் தொல்தமிழர் பண்பாட்டியல் கூறுகளை விளங்கிக்கொள்வதற்கான இலக்கிய மூலங்களாகச் சங்க இலக்கியங்கள் காணப்படுகின்றன. பழந்தமிழரது அக-புறவாழ்வினைச் சங்கப் புலவர்கள் கவிதை வடிவத்தில் பாடியுள்ளனர். அவர்களுடைய பாடல்களில் கையாளப்பட்டுவந்த உவமைகள், உருவகங்கள், இன்னும் பிற இலக்கிய உத்திகள் அக்கால மக்களுடைய வாழ்வினைத் தெள்ளத்தெளிவாக வெளிப்படுத்தியுள்ளன. தொழில் மரபு, சமய நிலை, போரியல் முறை, அரசாட்சி, உணவு ஈட்டல் என வாழ்வின் அனைத்து முதன்மை விடயங்களையும் சங்கப் பாடல்களின் வழியே அறிந்துகொள்ளமுடிகின்றது.

சங்ககால மக்களின் வாழ்வியல் கூறுகளை இயற்கை நெறி நின்று நோக்குகின்றபோது ஐந்திணை மரபுகளாக ஆராய்ந்தறிய முடியும். குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை, நெய்தல் எனும் ஐவகைப் பெருநிலப் பண்பாட்டுப் பரப்பினுள்ளே நெய்தல் நிலச் சமூகமாக மீனவர்களைச் சங்க இலக்கியங்கள் இனங்காட்டியுள்ளன. கடலும் கடல்சார்ந்த வாழ்வினை அடிப்படையாகக் கொண்ட நெய்தல் சமூகத்தினரது பண்பாட்டுச் சூழலியல் முதன்மையானது.

சமூக விஞ்ஞான அணுகுமுறையின் வழியே இலக்கியங்களை இனவரைவியல் பனுவல்களாகவும் (Literature as ethnographical documents), தகவலாளிகளாகவும் (text as informant) கொண்டு பகுப்பாய்வு செய்யும் புதிய அணுகுமுறைகள் மானிடவியலில் அண்மைய காலத்தில் முதன்மை பெற்று வந்துள்ளன. சங்க இலக்கியங்களும் தொல் தமிழ்க் குடிமரபின் இனவரைவியல் பனுவல்களாகவும் பண்பாட்டுத் தகவலாளிகளாகவும் உள்ளன (பக்தவத்சல பாரதி 2013). மானிடவியல் மனித சமூகம் பற்றி வரலாற்று நிலையிலும் பண்பாட்டு நிலையிலும் உயிரியல் நிலையிலும் தொல்லியல் நோக்கிலும் என்று வேறுபட்ட ஆய்வு அணுகுமுறைகளின் வழியே ஆராய்கின்ற ஒரு சமூக விஞ்ஞானப்

---

*Mr. Shanmugarajah Srikanthan, Lecturer in Anthropology, Department of sociology, University of Jaffna, Jaffna, Sri Lanka. Doing Ph.D., Research in Anthropology under the guidence of Dr. Bhakthavatsala Bharathi in Puducherry Institute of Linguistics and culture (PILC) under the Government of India's Common weath Scholarship Scheme (ICCR) from 29.07.2011.*

பிரிவாகும். அவற்றில் பண்பாட்டுச் சூழலியல் சார்ந்த அணுகுமுறை சங்க இலக்கியம் தொடர்பான பகுப்பாய்வில் முதன்மையானது.

பண்பாட்டுச் சூழலியல் என்பது சமூகத்திற்கும் இயற்கைக்கும் இடையிலாத் தொடர்பு பற்றிய முறையான ஆய்வுநெறியாகும். இது குறிப்பிட்ட சுற்றுச்சூழமைவிற்கேற்ப ஒரு பண்பாட்டின் தகவமைதல் தொடர்பான விடயங்களை முதன்மைப்படுத்துகின்றது (Francisconi 2006). ஒவ்வொரு பண்பாடும் தனித்துவமான கூறுகளைத் தன் சுற்றுச்சூழமைவுக்கேற்ப விருத்திசெய்துள்ளது. அவ்வாறு உருவாக்கியுள்ள பண்பாட்டியல் கூறுகளுக்கும் சுற்றுச்சூழலுக்கும் இடையிலான தொடர்பினை வெளிப்படுத்துவதே பண்பாட்டுச் சூழலியல் அணுகுமுறையின் முதன்மையான பணியாகும். இந்நிலையில் சங்ககாலத்தில் பல்வேறு திணைக்குடிச் சமூகங்கள் தத்தம் சுற்றுச்சூழலுக்கேற்பத் தகவமைத்துத் தனித்துவமான பண்பாட்டுக் கூறுகளை உருவாக்கிப் பேணிவந்துள்ளன. இவை பற்றிய ஏராளமான தரவுகளும் தகவல்களும் சங்க இலக்கியங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இவற்றுள் நெய்தல் திணைச் சமூகத்தினருடைய பண்பாட்டியல் கூறுகளை பிரதான பண்பாட்டுச் சூழலியல் நோக்கில் பகுப்பாய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பண்பாடு என்பது, மக்கள் தங்களுக்கான சுற்றுச்சூழலில், வாழிடத்தில் நன்கு தகவமைந்து வாழ்வதற்காக ஏற்படுத்தப்பட்ட வழிமுறை; அல்லது மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையிலான இடைவினையின் வழிப்பட்டது (பக்தவத்சல பாரதி 2012) என வரையறை செய்யலாம். இந்நிலையில் சங்ககால மீனவர்களின் பண்பாட்டுச் சூழலியலைப் பின்வரும் ஒழுங்கில் நோக்கலாம்.

**1. சுற்றுச் சூழலமைவு சார்ந்த வாழ்விடம்**

சங்ககாலத்தில் கடல் சார்ந்த பகுதிகளில் வாழ்ந்த மீனவர்களின் வாழ்விடச் சூழலமைவினைக் குறுந்தொகை

> ‘கடற்கரையில் ஞாழல் மரங்கள் இருக்கும். இவை இலைகளையும், பசுமையான அரும்புகளையும் உடையவை. இந்தக் கடற்கரையில் வரும் அலைகள் கறுத்த இருளைப் போன்றன. கடற்கரை மணலோ முழு நிலவைப் போன்றது. கடற்கரையில் பனைமரங்கள் நிற்கும்’

என விரிந்து செல்கின்றது (குறுந்.81). கடல்வளத்தை நம்பிவாழும் மீனவர்களது வாழ்விடங்கள் கடற்கரையை அண்மித்துக் காணப்படும் பெருமணற் பகுதியில் அமைந்துள்ளன. இவ் ஊர்களைப் ‘பாக்கம்’ (நற்.101:5), ‘பட்டினம்’ (பட்டி: 216–218) என்பர்.

*பெரும்பாணாற்றுப்படை* மீனவக்குடியிருப்பின் அமைப்பினை:

*வேழம் நிரைத்து வெண்கோடு விரைஇ*
*தாழை முடித்து தருப்பை வேய்ந்த*
*குறியிறைக் குரம்பை பறியுடை முன்றில்*
*கொடுங்காற் புன்னைக் கொடுதுமித்து இயற்றிய*
*பைங்காய் தூங்கும் பாய்மணற் பந்தர்*
*இளையரும் முதியரும் கிளையுடன் துவன்றி*
*புலவுநுனைப் பகழியும் சிலையும் மான*
*செவ்வரிக் கயலொடு பச்சிறாப் பிறழும்*
*மையிருங் குட்டத்து மகவொடு வழங்கி*
*கோடி நீடினும் குறைபடல் அறியாத்*
*தோள்தாழ் குளத்த கோடு காத்திருக்கும்*
*கொடுமுடி வலைஞர் குடிவயிற் சேப்பின்* (263–274)

என்று விவரித்துள்ளது. அதாவது மீனவரின் வாழ்விடமானது அதன் இயற்கைப் பின்னணியோடு காட்சிப்படுத்தப்படுகின்றது. இதில் அவ்வட்டாரத்திலேயே கிடைக்கக் கூடிய வேழக்கோல், வெண்கோடு, தாழைநார், தருப்பைப்புல் ஆகிய இயற்கையான ஆதாரங்களைக் கொண்டு கட்டப்பட்ட தாழ்வான இறப்பையுடைய வலைஞரின் குடில் அமைந்துள்ள முறையும் குடிலின் முற்றத்தில் வைக்கப்பட்டுள்ள மீனவர்களால் மீன்பிடிக்கப் பயன்படுத்தப்படும் பறி என்ற கருவியும் கடற்கரைக்கே உரிய தாவரங்களுள் ஒன்றான புன்னை மரத்தின் கொம்புகளால் கட்டப்பட்ட பந்தலும் அப்பந்தலின் நிழலில் முதியவர், இளையவர் ஆகியோர் ஓய்வெடுத்தலும் குடியிருப்பை ஒட்டி இருக்கக் கூடிய குளத்தில் மீனவர்கள் தம் மக்களோடு சேர்ந்து கயல், இறால் ஆகியவற்றைப் பிடிக்கும் காட்சியும் அத்துடன் அக்குளக்கரையில் காவல் காத்திருக்கும் நிலையும் வரிசையும் முன்னிறுத்தப்படுகின்றன.

அதிகமாகச் சங்ககால மீனவர்கள் சிறிய குடிசை போன்ற வீடுகளிலே வாழ்ந்தாலும் பெரிய தூண்களையுடைய உயர்ந்த மாடங்களிலும் வாழ்ந்துள்ளனர். இதனை 'நெடுங்கால் மாடத்து…' (பட்டி.111) எனும் *பட்டினப்பாலைப்* பாடலடியின் வழியே அறியலாம். சிறிய வீடுகள் பனையோலை (நற். 354) தாழை மடல் (நற். 370), நீர்முள்ளிச் செடிகள் (நற். 207), காயல் என்ற புல் (அகம். 370: 5) போன்றவற்றினால் வேயப்பட்டுள்ளன. ஆரம்பக் கால மனிதன் முதலில் குகைகளிலும் மரப்பொந்துகளிலுமே வாழ்ந்துள்ளதாகப் பெரும்பாலான ஆய்வுகளின் முடிவுகள் தெரிவிக்கின்றபோதும், சங்ககால மீனவர்கள் இயற்கையாகக் கிடைக்கும் பொருட்களைப் பயன்படுத்தித் தமது வாழ்விடங்களை அமைத்துள்ளமை அவர்களின் பண்பாட்டுப் படிமலர்ச்சியினைக் காட்டுகின்றது.

## 2. தொழில் சார் சூழலியல்

சங்ககாலத்தில் மீனவர்களின் தொழில்களாக மீன் பிடித்தல், முத்துக்குளித்தல், சங்கறுத்தல், உப்பு விளைவித்தல், மீன் உலர்த்தல், கடல் வாணிபம் செய்தல் என்பன முதன்மையானவையாக இருந்துள்ளன. சங்க இலக்கியங்கள் மீன் பிடிக்கும் சமூகத்தவர்களைப் 'பரதவர்' (பொருந. 218, சிறுபா. 159, குறுந். 304, நற்.38), மீன்வேட்டுவர் (அகம். 270:3), 'வலைஞர்' (பட்டி. 197, பெரும். 274) 'திமிலோன்' (அகம். 320:2) ஆகிய அடைமொழிகளின் வழியே குறிப்பிடப்பட்டுள்ளன.

சங்ககாலத்தில் வாழ்ந்த மீனவர்கள் அனைவரும் ஒரே சமூகமாக இருந்துள்ளனர். ஏனெனில் பரதவர் தவிர்ந்த ஏனைய சொல்லடைவுகளான மீன் வேட்டுவர், வலைஞர், திமிலோன் போன்றவை முறையே அவர்களுடைய தொழில் சார்ந்த நிலையில் (மீனை வேட்டையாடுதல்), பயன்படுத்தும் தொழில் கருவியின் அடிப்படையில் (கொடிய முடிச்சுக்களையுடைய வலையால் மீன்பிடித்தல்), கடலில் பயன்படுத்தப்படும் மீன்பிடிக்கலத்தின் அடிப்படையில் (திமில் - படகு) அமைந்தனவாகும். அதாவது சங்க காலத்தில் மீனவர்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்ட பெயர்களில் 'பரதவர்' என்ற சொல்லடைவே அவர்களுக்கான 'இடுகுறிப் பெயராகவும்' பரதர் தவிர்ந்த ஏனையவை 'காரணப் பெயர்களாகவும்' பயன்படுத்தப்பட்டுள்ளமை இதன் வழியே அறியமுடிகிறது.

இன்றும் மீன்பிடிக்கும் சமூகத்தைச் சுட்டும் பெயர்கள் சிலவும் காரணப் பெயர்களாகவே காணப்படுகின்றன. குறிப்பாக, கரையார் (கரையில் வாழ்பவர்கள்), முக்குவர் (முத்தினை எடுப்பதற்குத் தங்கள் மூச்சை முக்கி எடுப்பவர்கள்), பட்டனவர் (பட்டணங்களில் வாணிப நோக்கத்தோடு வாழ்பவர்கள்), போன்றவர்களைக் குறிப்பிடலாம். தொலமி குமரி முனையிலிருந்து கீழ்ச் செல்லும் கடற்கரையில் மீன் பிடிப்பவர்களைக் 'கரியாய்' (kareoi) என்று குறிப்பிடுகின்றார். இக்குறிப்பின் சரியான தமிழ் வடிவம் "கரையார்" ஆகும். அதாவது கரையிலுள்ளவர்கள் என்பதாகும் (கனகசபை 1979).

சங்ககாலத்தில் மீன்பிடிப்பதற்கு வலை (பெரும்.274), தூண்டில் (அகம்.216:1), உளி (குறுந்.304) பயன்படுத்தப்பட்டுள்ளன. அதிகாலையில் திமில்களில் காலச் சூழலுக்கும், கடலுக்கும் ஏற்ற வகையில் சங்ககால மீனவர்கள் வலைகளை நிரப்பிக் கொண்டு கடலில் மீன்பிடிக்கச் செல்வர். இவர்கள் பயன்படுத்திய வேறுபட்ட வலைகளைப் பற்றிப் பின்வரும் அடைமொழிகளின் வழியே அறியமுடிகின்றது: 'கொடு முடி வலைஞர்' (மதுரை.556) 'வரிவலைப் பரதவர்' (நற்.111:3), 'புதுவலைப் பரதவர்' (அகம்.10:10), மேலும், பெருவலை (நற்.74:1), நுண்வலை (அகம்.70:3) ஆகிய வலைகளையும் மீன்பிடித்தலில் பயன்படுத்தியுள்ளனர்.

கதிர் என்னுங் கருவி கொண்டு நூல் இழைகளை முறுக்கிக் கயிறு திரிப்பார்கள். அவ்வாறு திரித்த கயிறினைக் கொண்டு புதிதாய்ச் சிறுசிறு வலைத்துண்டுகளை முடித்துப் பின் அவற்றை நன்கு இணைத்து ஒன்றாக்கி முழுவலையாக உருவாக்கியுள்ளனர். இதனையே 'வடிக்கதிர் திரித்த வல்ஞாண் பெருவலை' என நற்றிணைப் (74:1) பாடலடி காட்டுகின்றது. இன்றும் வெண்கடற்கரையில் வாழும் மீனவர்களால் பயன்படுத்தப்படும் கரைவலையும் (பெருவலையும்) வேறுபட்ட அளவுடைய வலைகளை ஒன்றாக இணைத்துச் செய்யப்படுகின்றமை இங்குக் குறிப்பிடத்தக்கது.

கரைவலை / பெருவலை சங்ககாலத்திலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது. இதுவே உலகின் மிகத் தொன்மையான வலை என ஆய்வாளர்கள் குறிப்பிடுவர். *அகநானூற்றுப்* பாடல் (30) ஒன்றில் இது தொடர்பாகப் பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளது. நெடிய கயிற்றால் கட்டப்பட்ட குறுகிய கண்களையுடைய அழகிய வலை, கடலிலுள்ள பலவகையின மீன்களையெல்லாம் கடல் வறிதாம்படி ஒருங்கே கொள்ளும். அவ் வலையினைப் பற்றி இளையவரும், முதியவருமாகிய பரதவர்கள் மகிழ்ச்சியோடு, ஆரவாரத்தோடு கரைக்கு இழுப்பர். பின்னர் வலையில் வந்த மீன்களை இரந்தோரின் கலங்களில் நிறைப்பர். எஞ்சிய மீன்களைத் தங்களுக்குள் பங்கீடு செய்து, விலை கூறி விற்பர். இம் முறையானது இன்றும் இலங்கை, இந்திய வெண்மணல் கடற்கரைகளில் பயன்படுத்தப்படுகின்றது.

சுறா போன்ற பெரிய மீன்களைப் பிடிப்பதற்கு 'உளி' எனும் கருவியைப் பயன்படுத்தியுள்ளமையினைக் "கொல்வினைப் பொலிந்த கூர்வாய் எறிஉளி... கொடுந் திமில் பரதவர்" (304) என்று *குறுந்தொகைப்* பாடலடி குறிப்பிடுகின்றது. *நற்றிணையில்* "கயிறு கடையாத்த கடு நடை எறி உளித் திண்திமிற் பரதவர்..." (388) எனத் தொடங்கும் பாடலின் முதல் பத்துப் பாடலடிகளில் குறிப்பிடுவது யாதெனில் விரைவாகச் செல்லும் படகுகளில் கடற் தொழில் செய்வதற்குச் செல்லும் பரதவர்கள் உறுதியான புரிகளை உடைய கயிற்றின் முனையில் இரும்பினால் செய்யப்பட்ட உளிகளை இறுக்கமாகக் கட்டிவைத்திருப்பர். பெரிய மீன்களைக் கண்டதும் கயிறு கட்டப்பட்ட உளியை வேகமாகக் குறிபார்த்து எறிந்து மீனைப் பிடிப்பார்கள். உளியை நீண்ட மூங்கில் தடியில் கட்டியும் பயன்படுத்தியுள்ளனர். இன்றும் வட போர்னியாவில் வாழும் பகான்ஸ்கள் மத்தியில் வில்லு, அம்பு துணைக்கொண்டு மீன்பிடிக்கும் முறையானது காணப்படுகின்றது. அதாவது உளி, அம்புகளைப் பயன்படுத்தும் முறை தொன்மை வாய்ந்தது மட்டுமல்ல மிகவும் கடினமானது.

சங்ககால மீனவர்களின் தலைவன் கொண்கன், சேர்ப்பன், துறைவன், புலம்பன் எனும் பெயர்களால் அழைக்கப்பட்டான். சங்க இலக்கியத்தில் உப்பு வாணிபத்தில்

ஈடுபட்டவர்கள் உமணர்கள், நுளையர்கள் என்றும் அவர்களுடைய பெண்கள் நுளைமகள், பரத்தியர், உமட்டியர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளனர். இவற்றினைவிட நெய்தல் நிலக்குடிமக்கள் கடற்கரைப் பகுதிகளுக்குச் சிற்றரசர்களாகவும், குறுநில மன்னர்களாகவும் விளங்கியுள்ளனர் (கிருட்டிணமூர்த்தி 2002:12-14). இவற்றுடன் மீனவ மகளிர்களும் உப்புக்கண்டம் போடுதல், மீன் விற்றல் முதலிய தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். இதனை *நற்றிணைப்* பாடல் மீன் எறி பரதவர் மகள் நிணச் சுறா அறுத்த உணக்கல் வேண்டி இனப்புள் ஓப்பும் (45:6-7) என்று பதிவு செய்துள்ளது. இவையனைத்தும் சங்ககால மீனவர்களின் தொழில் முறையினையும் சமூக நிலையினையும் வெளிப்படுத்தியிருக்கின்றன.

## 3. சமூகத் தொடர்பியல் வலைப்பின்னல்

சங்ககால மீனவர்களின் சமூகத் தொடர்பு வாணிபத்தின் மூலம் சிறப்புற்றிருந்துள்ளது. பல வண்டிகளில் உப்பினை ஏற்றிச் செல்லும் உமணர்கள், அவற்றினைப் பண்டமாற்று அடிப்படையில் மருதநிலத்தில் விற்பனை செய்துள்ளனர் (பெரும். 45-65, புறம். 116:1-8). “யவனர் *தந்த வினை* மாண் நன்கலம், பொன்னொடு வந்து கறியொடு பெயரும் வளங்கெழு முசிறி” (149:8-10) எனும் *அகநானூற்றுப்* பாடலில் மிளகு ஏற்றுமதியில் பெயர் பெற்ற முசிறித் துறைமுகத்தில் யவனர்கள் பொன்னோடு வந்து மிளகினை ஏற்றிச் செல்வதாக விளக்கப் பெற்றுள்ளது. சங்ககால மன்னர்கள் புகார், முசிறி, கொற்கை போன்ற பழந்தமிழகத்தில் நகரங்களை உருவாக்கியுள்ளனர். இந் நகரங்கள் மருதநிலப் பிரதேசங்களின் நகரங்களான உறையூர், வஞ்சி, மதுரை போன்றவற்றிற்கு உப நகரங்களாக அமைக்கப்பட்டன. இவை வாணிபத்தை ஒழுங்கமைப்பதினை நோக்கமாகக் கொண்டிருந்தன (Roche 1984).

சங்ககால மீனவர்கள் கிரேக்க, உரோம நாடுகளுடனான வாணிபத்தில் ஈடுபட்டுள்ளனர். இதற்குச் சான்றாதாரமாக உரோமாபுரியின் பழைமையான நூல்களில் பழந்தமிழகத் துறைமுகங்களின் பெயர்கள் பின்வரும் வகையில் உருக்குலைந்து காணப்படுகின்றன. குமரி: கொமாரி, கொற்கை: கொல்சாய், காவிரிப்பூம் பட்டினம்: காமரா (பிள்ளை, 2002). இந்நிலையில் சங்ககால மீனவர்களின் பண்பாட்டுப் பரவுகையில் வாணிபமும் சமூகத் தொடர்பும் முதன்மை வாய்ந்தனவாக இருந்துள்ளன.

## 4. சமயமும் சடங்கியலும்

பண்பாட்டுப் புவியியலில் சமய நம்பிக்கை சார்ந்த படிமலர்ச்சி முதன்மையானது. சங்ககாலத்தில் நிலவிய சுறாமுள் வழிபாடும் இதற்குத் தகுந்த எடுத்துக்காட்டு. இது தொடர்பாகப் *பட்டினப்பாலையில்* மிக விரிவாகக் காணமுடியும். *பட்டினப்பாலையில்* 78 தொடக்கம் 93 பாடல் அடிகளுக்கு, பொ.வே. சோமசுந்தரனார்,

> “தோற்பரிசையை நிரல்பட வைத்து வேலை ஊன்றிச் செய்த மறவர்க்கு நடுகின்ற கல்லிற்கிட்ட அரண் போன்று நீண்ட தூண்டிற் கோல்களைச் சாத்திய குறுகிய கூரைகளை உடைய குடியிருப்பின் நடுவில் நிலவினைச் சேர்ந்த இருள் போல் வலைகிடந்து உலரும் மணலை உடைய முற்றத்தைக் கொண்ட மனையில் தாழையின் அடியிலே நின்ற வெண்டாளியின் குளிர்ந்த மலரால் புனைந்த மாலைகளை அணிந்தவர்களாகச் சினையுடைய சுறாமீனின் கொம்பை நட்டு அதனிடமாகத் தம் மனையின் கண் சேர்த்தப்பட்ட வலிய தெய்வமாகிய வருணனுக்கு வழிபாடு செய்து, அத் தெய்வத்திற்கிட்ட தாழை மலரைச் சூடியும், பனையின் கள்ளைப் பருகியும் பரந்த கரிய குளிர்ந்த கடலிடத்தே வேட்டம் போதலைத் தவிர்த்து உவாநாளிலே தாம் விரும்பும் உணவை உண்டும் தம் மனம் போனவாறு விளையாடிக் களித்தனர்”

என்று விளக்கியுள்ளார் (மேற்கோள்: தனஞ்செயன் 1996). இதனைக் குலக்குறிய வழிபாட்டு நிலையிலும் பகுத்து ஆராயமுடியும்.

தொகுத்து நோக்கும் பொழுது சங்ககால மீனவர்களின் சமூகநிலை, தொழில், வாழ்விட அமைப்பு போன்ற இன்னோரன்ன பண்பாட்டுக் கூறுகள் இயற்கையுடன் இயைவுபெற்றுப் படிமலர்ச்சி அடைந்தனவாகவே காணப்படுகின்றன. கற்கால மனித வாழ்விலிருந்து தமிழர் பண்பாடு அடைந்த நாகரிக நிலையினைச் சங்க இலக்கியங்களின் வழியே சங்ககால மீனவர்களுடைய பண்பாட்டுக் கூறுகள் தெளிவாக வரையறுத்துக் காட்டி நிற்கின்றன.

## துணை நூல்கள்

கிருட்டிணமூர்த்தி, அ. 2002. *மீனவர் வாழ்வியல்: கடலூர் மாவட்டம்,* சென்னை: திருக்குறள் பதிப்பகம்.

*சங்க இலக்கியம் பத்துப் பாட்டு: மூலமும் உரையும் பகுதிகள் 1 - 2,* 2004. வி. நாகராசன் (உரையாசிரியர்). சென்னை: நியூ செஞ்சுரி புக் அவுஸ் (பி) லிட்.

*சங்க இலக்கியம் எட்டுத் தொகை: மூலமும் தெளிவுரையும் தொகுதிகள் 1 - 3,* 2004. ச.வே. சுப்பிரமணியன் (உரையாசிரியர்). சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.

சசிவல்லி, வி.சி. 1989. *பண்டைத் தமிழர் தொழில்கள்,* சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

தனஞ்செயன், ஆ. 1996. *குலக்குறியியலும் மீனவர் வழக்காறுகளும்.* பாளையங்கோட்டை: அபிதா வெளியீடு.

பக்தவத்சல பாரதி, *மானிடவியல் கோட்பாடுகள்.* புத்தாநத்தம்: அடையாளம்.

___________ 2013. *பாணர் இனவரைவியல்.* சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

பிள்ளை, கே. கே. 2002. *தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்.* சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

Francisconi, Michael Joseph. 2006. "Cultural Ecology". In H. James Birx (ed.). *Encyclopedia of Anthropology* Vol. 2: 628-31. London: Sage Publications.

Kanakasabhai, V. (1979 (1904)). *The Tamils Eighteen Hundred Years Ago*. New Delhi: Asian Educational Services.

Roche, A. Patrick. 1984. *Fishermen of the Coromandel: A Social Study of the Paravas of the Coromandel.* New Delhi: Manohar Publication.

குறிப்பு:

முனைவர் இரா. கலைக்கோவன் அவர்கள் எழுதிய அரங்கேற்றுக்காதையும் நாட்டிய சாத்திரமும் எனும் கட்டுரை சென்ற தமிழியல் 85 இல் இடம்பெற்றது. அக்கட்டுரையில் தனது தொடர் ஆய்வின் பயனாக விளைந்த இரு திருத்தங்களை இவ்விதழின் மூலம் குறிப்பிடக் கேட்டுக்கொண்டுள்ளார்.

திருத்தம்:

இடக்கை தேவார ஆசிரியர்களால் சுட்டப்பெறவில்லை. கல்வெட்டுக்களில் இதுநாள் வரை கண்டறியப்படவில்லை என்று சுட்டியுள்ளார். இவ்விரு சுட்டல்களுமே சரியன்று. சம்பந்தர் தம்முடைய பதிகமொன்றில் *(3618)*

'கத்திரிகை துத்திரிக றங்குதுடி தக்கையொ டிடக்கை படகம்'

என இசைக்கருவிகளை வரிசைப்படுத்தும் இடத்து இடக்கையைப் பதிவு செய்துள்ளார்.

அதுபோலவே நெல்லையப்பர் கோயிலில் படியெடுக்கப்பட்டுள்ள கல்வெட்டொன்றில் (தெ.சி.க. தொகுதி-5, கல்வெட்டெண்.415) 'இடக்கை' அக்கோயிலில் இசைக்கப்பெற்ற இசைக் கருவியாகக் குறிப்பிடுகிறது. இவ்விரு திருத்தங்களோடு அக்கட்டுரையை அணுகுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

பேரா. பா. இராசா